[2nd March 1968

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : லாரிகளைப் பிடிக்க வேண்டு மென்பதற்காகத்தான் சில விதிகள் தேவைப்படுகின்றன. அதைப்பற்றி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். இதுபோன்ற விவரங்கள் கனம் உறுப்பினர் கூறுவது மன்றத்தில் விவரம் தெரிந்துகொள்ள உதவுகிறது. இதுபோன்ற காரியங்கள் அவர்கள் இருக்கும் சுற்று வட்டாரங்களிலேதான் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களுடைய நல்ல எண்ணத்தைப் போன்றே அரசாங்கமும் சமூக விரோத சக்திகளை பிடிக்கத் தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறது. கனம் உறுப்பினர் அவர்களுக்கு இந்த கள்ளக்கடத்தல் பற்றிய விவரங்கள் சீக்கிரமாகக் கிடைத்து விடுகின்றன. அவர்கள் அதை அவ்வப்போது தெரிவித்தால், அரசாங்க அதிகாரிகளும் ஒத்துழைப்பார்கள். என்னிடத்தில் தகவல்கள் வந்தாலும், அவர்களுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன். இந்த அரசாங்கமும் நன்றி செலுத்தும்.

திரு. சி. பி. சிற்றரசு : லாரிகளைப் பறிமுதல் செய்வதற்கு சட்டமில்லை என்றால் அந்த லாரிகளை ஆறு மாத காலத்திற்காவது ஓட்டக்கூடாது என்று தடுக்க சட்டம் இருக்கிறதா? அப்படி ஏற்பாடு செய்ய சர்க்கார் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப்பற்றி அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, ஆறு மாதத்திற்குள் தேனியிலும், போடி, கொடைக்கானல், பெரியகுளத்திலும் சில சமூக துரோகிகள் கூட லாரிகளை கூட்டாக வாங்கி, 10 லாரிகளுக்கு மேல் வைத்துக்கொண்டு, கொடைக்கானல் வழியாக தினசரி நெல் கடத்தி வருகிறார்கள். அதைப்பற்றிய நம்பகமான தகவல்களும், கடிதங்களும், அதிகமாக இரண்டு மூன்று தினங்களுக்குள் என்னிடம் வந்திருக்கின்றன. அரசாங்கம் ஒற்றர்களை வைத்து நடவடிக்கை உடனே எடுக்க வேண்டும். கள்ளக்கடத்தல் காரணத்தால் எங்கள் ஊரில் ஒரு படி அரிசி மூன்று ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நம்பமாட்டீர்கள். அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது அரசாங்கம்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதை ஒப்புக்கொள்கிறேன். கம்பம் பகுதியில் பச்சைப்பசேல் என்று வயல்கள் இருந்தாலும் அந்த உணவு தானியங்கள் அங்கே பயன் படாமல் பல காலமாக இருந்து வருகிறது. கள்ளக் கடத்தல்காரர்கள் கடத்துவதை ஒரு கலையாகவே நடத்தி வருகிறார்கள். நம்முடைய விழிப்புக்கும் அவர்களுடைய குயுக்திக்கும் இடைவிடாத போராட்டம் நடைபெற்று வருகிறது. அதில் நண்பர் தியாகராஜன் போன்றவர்கள் கொடுக்கும் தகவல்கள் பயன்படுமானால் இந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளும்.

Price of paddy

***152 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food be pleased to state—**

(*a*) the basis on which the procurement price of foodgrains is fixed in the Madras State ;

(*b*) the price per quintal of paddy, in the Madras State ;

(*c*) whether the agriculturists have requested to increase the price of paddy ; and

(*d*) if so, the action taken thereon by the Government ?

நெல் விலை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்கவேண்டுகிறேன் —

(அ) தமிழகத்தில் உணவு தானியக் கொள்முதல் விலை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது ?

(இ) தமிழகத்தில் ஒரு குவிண்டால் நெல் விலை என்ன ?

(உ) நெல் விலையைக் கூட்டும்படி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வந்ததா ?

(எ) ஆமெனில் அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) (1) பயிர் விளைவுச் செலவு அதிகரித்துள்ளதால் 1966-ம் ஆண்டில் கொள் முதல் விலையை உயர்த்துமாறு இம்மாநிலத்திலுள்ள பல்வேறு வேளாண்மைக் கழங்களிடமிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் முறையீடுகள் வந்தன. இவற்றைக் கவனமாகப் பரிசீலனை செய்த பிறகு, அரசாங்கம் அடியிற்கண்ட வகைப் பாட்டின் அடிப்படையில் நெல் கொள் முதல் விலையை மாற்றியமைத்தது :—

	ரூபாய்.
மட்டரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு	40
நடுத்தர வகை நெல் குவிண்டால் ஒன்றுக்கு ..	42
சிறந்த ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு	45

மேலே குறிப்பிட்ட விலைகள் 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14-ம் தேதி வரை செயலில் இருந்தன.

(2) மட்டரக நெல்லின் ஆதரவு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 43 ஆக வறையறுக்கப்படலாம் என இந்திய அரசு இம்மாநில அரசாங்கத்திற்கு 1967 மே திங்களில் பரிவுரை செய்தது. மேலும், பல்வேறு தரப்பட்ட வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு பிற வகைகளின் ஆதரவு விலைகளையும் மாற்றியமைக்குமாறு இம்மாநில அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டது. இம்மாநிலத்திலுள்ள உற்பத்தியாளர்க்கும் மட்ட ரக நெல்லுக்காக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 43 ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்தது. அதாவது, கொள்முதல் விலையாக ரூ. 43-ம் பூரிப்பூதியமாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 3-ம் கொடுக்கப்பட்டது. ஆயினும், இந்திய அரசின் ஆலோசனை பரிசீலனை செய்யப்பட்டது. உற்பத்தியாளர்களுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 3 என்ற அடிப்படையில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுவந்த பூரிப்பூதியத்தை கொள்முதல் விலையில் இணைப்பதென முடிவு செய்யப்பட்டது. அவ்வண்ணமே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. நெல்லின் தற்போதைய கொள்முதல் விலை விவரம் வருமாறு :—

	ரூபாய்.
சிறந்தரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு	48
நடுத்தர வகை நெல் குவிண்டால் ஒன்றுக்கு ..	45
மட்டரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு	43

இப்புதிய விலைகள் 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி முதற்கொண்டு செயலுக்கு வந்தன.

(3) உணவு வேளாண்மைத் துறை 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதியன்று வெளியிட்ட 224-ம் எண் அரசாங்க ஆணையில், சோளம், கம்பு பிற சிறு தானியங்களின் அதிக அளவு விலையை அரசாங்கம் பின்வருமாறு முடிவு செய்தது : —

	குவிண்டால் விலை.
	ரூபாய்.
கேழ்வரகு	50
சிவப்புச் சோளம்	50
வெள்ளைச் சோளம்	52
பிற சிறு தானிய வகை அனைத்தும்.	50

இம்மாநிலத்தில் அறுவடைக்குப் பின்னர் உடனடியாக நிலவிய விலை களின் அடிப்படையில் மேற்சொன்ன விலைகள் முடிவு செய்யப்பட்டன. இவ்விலைகள் இம்மாநிலத்தில் இன்னும் செயலில் இருந்து வருகின்றன.

(இ) தற்போதைய நெல் கொள்முதல் விலை விவரம் வருமாறு :—

	குவிண்டால் விலை.
	ரூபாய்.
சிறந்த ரகம்	48
நடுத்தரம்	45
மட்ட ரகம்	43

(உ) ஆம். நெல் கொள் முதல் விலையைக் கூட்டும்படி பல்வேறு வேளாண்மைக் கழகங்களிடமிருந்தும் தனிப்பட்ட நிலக்கிழார்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் முறையீடுகள் அரசாங்கத்திற்கு இன்னும் வந்த வண்ணம் இருக்கின்றன.

(எ) தொடர்புள்ள எல்லாக் கூறுகளேயும் கருத்தில் கொண்டு அண்மையில்தான், அதாவது 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி முதற்கொண்டே நெல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாலும், அதிகரித்த விலைகள் உற்பத்தியாளர்களுக்கு ஆதாயம் தரத்தக்கவை என்று கருதப்படுவதாலும், மேற் சொன்ன முறையீடுகளின் மீது தற்போது அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

உணவு தானியங்களுக்குக் கொள் முதல் விலையை இந்திய சர்க்கார் காட்டுகிற வழி முறைகளின் அடிப்படையில் இந்த அரசாங்கம் நிர்ணயிக்கிறது. இப்போது இங்குள்ள நெல்லின் விலை சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 43, நடுத்தர ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 45, சிறந்த ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 48. கொள் முதல் விலையைக் கூட்டும்படி சிலர் அனுப்பிய மனுக்கள் வந்துள்ளன. 1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி முதற்கொண்டு நெல் விலை அதிகரித்திருப் பதால் அந்த விலை விவசாயிகளுக்கு நல்ல ஊதியம் தரத்தக்கது என்று அரசாங்கம் கருதுவதால் தற்போது விலை கூட்ட நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : ஆந்திராவில், மைசூரில், கேரளாவில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு என்ன விலை கொடுக்கப்படுகிறது ? அதைப் போல தமிழகத்தில் கொடுப்பதில் உள்ள தடை என்ன ? ஏன் கொடுக்கக் கூடாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆந்திராவில் விலை என்ன என்று பிரமானந்த ரெட்டி அவர்களுக்குக் கடிதம் எழுதித் தெரிந்து கொள்ளலாம். இந்தப் பேச்சு பிரசாரம் செய்வதற்காகத்தான் பயன் படுகிறது. ஆந்திராவிலும் இதே விலைதான் கொடுக்கப்படுகிறது. ஐந்து நாட்களுக்கு முன் ஆந்திரா முதலமைச்சர் மாண்புமிகு பிரமானந்த ரெட்டி அவர்களிடத்திலும் அந்த மாநில உணவு அமைச்சர் ராஜூ விடமும் பேசினேன். விலை கூட்டிக்கொடுக்கிறீர்களா என்று கேட்டதற்கு அவர்கள் Agricultural Price Commission நிர்ணயித்திருக் கிற விலையைத்தான் நாங்கள் அனுசரிக்கிறோம் என்று சொன்னார்கள். அங்கே ரூ. 57 கொடுக்கிறார்கள் குவிண்டாலுக்கு என்றால் அந்த விலை Super fine என்று உயர்ந்தரக நெல்லுக்குத்தான் கொடுக் கிறார்கள். இங்கே உள்ள சாதாரண ரக நெல்லுக்கு அந்த விலை கொடுக்க வில்லை என்பதும், 47 ரூபாய்தான் கொடுக்கிறார்கள் என்பதும் சரியல்ல. அவர்கள் கட்சியைச் சேர்ந்த அரசாங்கம்தான் ஆந்திராவில் இருக்கிறது. அவர்களுக்குக் கடிதம் எழுதி கனம் உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : In view of the paramount need for increasing food production, will the Government consider the question of appointing a cost accountant to

2nd March 1968]

work out the current cost of production in the different districts in the State so that a proper incentive price can be given to cultivators for the levy paddy ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Government think there is no necessity for such a committee.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சென்ற அரசாங்கத்தில் விவசாயிகளுக்குப் போனஸ் கொடுக்கப்பட்டதே, அதாவது இப்போது கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த அரசாங்கம் கொடுக்கிற விலை நியாயமான விலை. விவசாயிகளுக்குச் சரியான விலை என்று கருதுகிறது. அதைப் பற்றி அரசியல் ரீதியான புகார்கள் தான் இருக்கின்றனவே தவிர, விவசாயிகளிடத்தில் நல்ல வகையில் பெரிய ஆதரவைப் பெற்றிருக்கிறோம். குறைவான விலை என்பது இந்த அரசாங்கத்தின் கருத்து அல்ல.

திரு. கே. ராமதாஸ் : அரசியலுக்கு அப்பாற்பட்ட விஷயம் இது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது விவசாயப் பெருங்குடிமக்களிடமிருந்து விலையை உயர்த்த வேண்டுமென்று மனுக்கள் வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அப்படி விவசாயிகளே விலையை உயர்த்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்களே, அதற்கு சர்க்கார் என்ன செய்ய உத்தேசம் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : விவசாயிகளிடம் கனம் உறுப்பினர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அந்த அளவுக்கு அரசாங்கத்திற்கும் அக்கறை உண்டு. தஞ்சையில் ரூபாய் 40 லட்சம் வரையில் வரி வஜா செய்யப்பட்டது. பல இடங்களில் தீர்வை கொடுக்க வேண்டியதில்லை என்று செய்திருக்கிறது. உரவகைகள் போன வருஷம் பிளாக் மார்க்கெட்டில் விற்றது ; முந்தைய அரசாங்கம் இருந்தபோது, இந்த அரசாங்கத்தில் மாண்புமிகு வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் சொன்னார்கள். " உரவகைகள் 20 ஆயிரம் டன் கொண்டுவந்து விட்டார்கள்; கொடவுனில் வைக்க இடம் இல்லை " என்று. இவையெல்லாம் விவசாயத்தில் இந்த அரசு கொண்டிருக்கிற அக்கறைக்கு நல்ல அறிகுறிகளாகும். கடன் வாய்ப்புகளை அதிகமாக்கியிருக்கிறோம், உணவு தன்னிறைவு செய்வதில் இப்போது முனைந்திருக்கிறோம். **Dr. Gadgil, Planning Commission**-ல் இருக்கிறார்கள். அவர்கள் கூட இது பற்றி கூறியிருக்கிறார்கள். அம்மையார் ஒரு கமிட்டி போடவேண்டுமென்று கேட்டார்கள்.

திருமதி லெட்சுமி கிருஷ்ணமூர்த்தி : கமிட்டி என்று நான் கூறவில்லை. இந்திய அரசாங்கத்தில் cost accountant வைத்திருக்கிறார்கள். அதைப் போல் இங்கே வைத்தால் நிர்ணயிக்க சுலபமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : Agricultural Price Commission ஒவ்வொரு மாகாணத்திலும் எப்படியிருக்கிறது என்ற அடிப்படை அம்சங்களை ஆராய்ந்த பிறகுதான் முடிவு செய்யும். காட்கில்,

" Increase in procurement price will push up the consumer price of foodgrains correspondingly and the possible inflationary effect could not be ignored."

" The food policy enunciated by the Planning Commission aimed at stabilising the food prices over the next year as a prerequisite for holding the general priceline and doing away with food imports as an essential step towards self-reliance."

என்றும் சொல்லி இவை இரண்டிற்கும் சம்பந்தமில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்போதிருக்கிற புரொக்கியூர்மெண்ட் விலைகள் "Producer-consumer-oriented" என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் கணக்குப் பார்த்தபிறகு, நிர்ணயித்த விலைதான் இன்று இருக்கிறது. திடீரென்று இந்த மார்ச் மாதத்தில் ஏற்பட்டதல்ல. இதையே தான் முதலிலும் கொடுக்கப்பட்டது.

திரு. டி. கே. சுப்பையா : நெல் விலை உயர வேண்டுமென்று சொல்லும்போது அதை அரசியல் பிரச்சனையாகவே கருதிக்கொண்டு "நாங்கள் எல்லாம் விவசாயிகள் அல்ல" "விவசாயிகள் பிரதிநிதிகள் அல்ல" என்று கருதாமல் இனிமேலாவது இந்த மந்திரி சபை இது விவசாயிகளின் பிரச்சனை என்று கருதுமா ?.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நானும் விவசாயிதான். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். விவசாயம் செய்து கொண்டு வருபவர்கள் தான். விவசாயம் என்பது தங்களுக்கு மட்டும் ஏக போகமானது என்று யாரும் கருதத் தேவையில்லை. இந்த நாட்டிலுள்ள எல்லோருமே குடியானவ மக்கள் தான். இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு விரோதமானதல்ல. இதற்கு முன்னால் இங்கேக் எதிர்கட்சியில் இருந்த ஆர். வெங்கடராமன் அவர்கள் இப்போது பிளானிங் கமிஷனில் இருக்கிறார்கள். என்னை ஒரு சமயம் அவர்கள் வீட்டுக்குச் சாப்பாட்டுக்கு அழைத்திருந்தார், டெல்லிக்கு உணவு மாநாட்டுக்குப் போயிருந்த சமயத்தில். அப்போது " இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் கொள்முதல் பற்றிக்கூறுவது சரியா " என்று கேட்டேன். அவர்களுடைய சகோதரர் பட்டுக்கோட்டையில் வக்கீலாகவோ விவசாயியாகவோ இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து வந்த கடிதத்தை என்னிடம் காட்டினார்கள். அதில் அவர், " என்னுடைய நெல்லை கொள்முதலுக்குக் கொடுத்து விட்டேன். 20 வருஷத்தில் யார் நமக்கு இந்த விலையைக் கொடுத்தார்கள். தி. மு. க. அரசாங்கம் கொள்முதலில் நல்ல விலை கொடுத்து இருக்கிறார்கள்" என்று எழுதியிருந்தார். ஆகையால் அவர்கள் கொள்முதல் விலையை வரவேற்றிருக்கிறார்கள். உணவுப்பொருள் விலை ஏறிக் கொண்டே போனால் மற்ற பொருட்களின் விலையும் ஏறும். விலையை ஸ்திரப்படுத்த கணக்கெடுக்கப்படுகிறது. கடந்த வருஷம் இரண்டு லட்சம் டன் தஞ்சையில் கொள்முதல் செய்யப்பட்டது. காலாகாலத்தில் லாரிகளில் ஏற்றி, ரயிலில் போட்டு பணம் எல்லாம் கொடுத்து வெளியிலே கொண்டுபோகாமல் இருந்திருந்தால் ரூபாய் 30-க்கு வந்திருக்கும். அப்படி ஏற்படும் என்று காட்கில் எச்சரித்தார். ரூ. 30க்கு வாங்குவதற்கு ஆள் இல்லாமற் போய் விட்டது. ஆகையால் சரியான விலை தான் இது. Consumers களையும் காப்பாற்ற வேண்டும். அதே நேரத்தில் விவசாயிகளிடமும் இந்த அரசு அக்கரை கொண்டுள்ளது.

Rice supply

•153 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state —

(*a*) whether a representation was made to the Sub-Collector, Sivakasi, demanding the opening of fair-price shops to supply 12 ozs. of rice by Thiruvalargal, Subbarajah, M.L.A., Ulaganathan and Alagarsami on behalf of the farmers, society in Ramanathapuram District ; and

(*b*) if so, the steps taken thereon ?

அரிசி வழங்கல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் சங்க சார்பில் 1967 அக்டோபர் மாதத்தில் திருவாளர்கள் சுப்புராஜா, எம்.எல்.ஏ.,